*Sri Lankan Journal of Arabic and Islamic Studies*
*Published by Faculty of Islamic Studies and Arabic Language*
*Volume 8 Issue II, December 2025*
*E-ISSN: 2550 – 3014, P. 1-15*
*DOI: https://doi-ds.org/doilink/03.2023-55683162/8.2-1*

# இஸ்லாத்தின் பார்வையில் வினைத்திறனான கற்பித்தல் நுட்பங்கள்: ஓர் மதிப்பீட்டாய்வு

## (AN EVALUATION RESEARCH IN EFFECTIVE TEACHING TECHNIQUES IN ISLAM)

NOORUL SHIFA JAFEER[1], M.A.F. ANFAAL[2], M. IBATHUR RAHMAN[3] & MOHAMED HANIFA MOHAMED SIFKAN[4]

[1-4] DEPARTMENT OF ISLAMIC STUDIES,
SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA

Correspondence: mhmsifkan@gmail.com

***Abstract:*** *Education is one of the basic needs in human life; it develops a person into a perfect member of society. Education occupies the center in Islam, and its importance is stressed time and again in the Qur'an and the Sunnah. The commitment of both teachers and learners to the educational process is imperative for its success, and negligence with regard to this commitment may bring about grave consequences in worldly life and the hereafter. A sound and progressive society cannot be achieved without proper guidance and effective learning. Students face multiple learning difficulties in the present perspective, which mostly originate from the absence of proper learning strategies and the unsatisfactory utilization of efficient teaching methods by teachers. This situation has motivated the researchers to find and analyze some teaching techniques that may help students overcome their learning burdens, taking guidance from Islamic texts. This research will employ a descriptive analytical approach based on secondary data. Several teaching techniques could be identified from the Qur'an and the Sunnah: simplification, dialogue, discussion, questioning, visualization, explanation through examples, comparative clarification, repetition and retelling, motivation and encouragement, evaluation of students, the use of humor in correcting mistakes, and the stimulation of research and critical thinking. The study emphasizes that these Islamic-based pedagogical methods are still pertinent and useful for modern educational practice.*
***Keywords****: Islam, Education, Teaching Techniques, Teachers*

**ஆய்வுச் சுருக்கம்**
*கல்வி என்பது ஒரு மனிதனின் வாழ்வில் இன்றியமையாத தேவைப்பாடாகும். ஒரு மனிதன் சீரான பண்பாடு கொண்ட மனிதனாக வாழ்வதில் கல்வியானது மிகப் பெரும் பங்காற்றுகிறது. இஸ்லாம் கல்விக்கு மிக முக்கியமானதோர் இடத்தை வழங்கியுள்ளதோடு கல்வியின் சிறப்புக்கள் பற்றியும் அல்குர்ஆன், அஸ்ஸுன்னாவினூடாகப் பல இடங்களில் தெளிவுபடுத்தியுள்ளது. அமானிதமான கல்விப் பணியை ஆசிரியர்களும், மாணவர்களும் சமமாக நிறைவேற்ற தவறும் பட்சத்தில் ஈருலகிலும் பாரிய தாக்கங்ளை ஏற்படுத்தும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. முறையாக மாணவர்கள் வழிகாட்டப்படாதவிடத்து சிறந்ததோர் சமூகத்தை எம்மால் எதிர்பார்க்க முடியாhது. இதனடிப்படையில் இன்று மாணவர்கள் கல்வி கற்றலில் பல்வேறு வகையான சிரமங்களை எதிர்கொள்கின்றனர். அதற்கான முக்கிய காரணம் மாணவர்கள் முறையான கற்றல் நுட்பங்களை அறிந்து கொள்ளாமையும் ஆசிரியர்கள் முறையான நுட்பமுறைகளைப் பயன்படுத்தி கற்பித்தல் நடவடிக்கைகளில் ஈடுபடாமையும் ஆகும். எனவே இப் பிரச்சினையை மையப்படுத்தியதாக இவ்வாய்வு அமைவதோடு மாணவர்கள் எதிர்கொள்ளும் இடர்பாடுகளை நிவர்த்தி செய்வதற்காக ஆசிரியர்கள் பின்பற்ற வேண்டிய கற்பித்தல் நுட்பங்களை இனங்காண்பதனை நோக்கமாகக் கொண்டு முன்னெடுக்கப்பட்டுள்ளது. இவ்வாய்வானது இரண்டாம் நிலைத் தரவுகளை*

Submitted: 22 November, 2024 Accepted: 26 November, 2025 Published: 24 December, 2025

மையப்படுத்தி பண்புசார் முறையில் விபரணப் பகுப்பாய்வாக முன்னெடுக்கப்பட்டுள்ளது. இவ்ஆய்வில் இலகுபடுத்தல், உரையாடல், கலந்தாலோசித்தல், வினாத் தொடுத்தல், காட்சிப்படுத்தல், உதாரணங்கூறி விளக்கல், ஒப்பீட்டு ரீதியில் தெளிவுபடுத்தல், மீட்டச் சொல்லல், செயற்படுத்திக் காட்டல், செயற்பட வைத்தல், ஊக்குவித்தல், மாணவனை இனங்காணல், தவறு விடுகின்ற சந்தர்ப்பத்தில் இங்கிதமாக எடுத்துரைத்தல், ஆய்வு செய்யத் தூண்டல் முதலான பல கற்பித்தல் நுட்பங்கள் அல்குர்ஆன், அஸ்ஸுன்னா ஒளியில் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

***திறவுச் சொற்கள்:*** *இஸ்லாம், கற்பித்தல், நுட்பங்கள், ஆசிரியர்கள்*

## அறிமுகம்

*இஸ்லாம் மார்க்கமானது ஈருலகுக்கும் வழிகாட்டியான மார்க்கம் என்ற வகையில் அதன் போதனைகள் அனைத்து மக்களுக்கும் பொதுவான அமைப்பில் எல்லோராலும் பின்பற்றத் தகுமான வழிகாட்டல்களை தன்னகத்தே கொண்டுள்ளது. அந்தவகையில் கற்றலுக்கும் இஸ்லாம் மார்க்கமானது மிக முக்கிய இடத்தை வழங்கியுள்ளதோடு அல்குர்ஆன் மற்றும் அஸ்ஸுன்னாவின் பல இடங்களிலும் அதன் முக்கியத்துவம், போதனைகள் குறித்து பேசப்பட்டுள்ளதனை அவதானிக்கலாம். அல்லாஹ்வினால் இறக்கியருளப்பட்ட முதல் வஹியே "ஓதுவீராக!, வாசிப்பீராக!" என ஆரம்பிப்பதிலிருந்து இஸ்லாம் கல்விக்கு வழங்கியுள்ள முக்கியத்துவத்தை அறிந்து கொள்ள முடியுமாயிருக்கும்* (Noorul Shifa & Sifkan, 2025)*. அதேவேளை "கல்வி கற்பது ஒவ்வொரு முஸ்லிமான ஆண், பெண் மீதும் கடமையாகும்" என நபியவர்கள் குறிப்பிடுவதிலிருந்தும் இஸ்லாத்தில் கல்வியின் அவசியம் எவ்வாறு வலியுறுத்தப்பட்டுள்ளது என்பதனை அறியலாம்.*


*இஸ்லாமிய நோக்கில் கல்வி என்பது பாடப்போதனையுடன் மட்டுப்படுத்தப்பட்ட ஒன்றல்ல. மாணவனது மூளையில் தகவல்களைத் திணிப்பது அதன் நோக்கமல்ல. மாறாக அது தனிமனித வளர்ச்சிக்கு துணை புரியக் கூடியதாக அமைய வேண்டும். இதன் மூலம் ஓர் உன்னத மனிதனை உருவாக்குவதே. குறிப்பாக கல்வியானது மாணவர்களின் ஒழுக்க மேம்பாட்டுக்கும் தார்மீக வளர்ச்சிக்கம் துணைபுரிவதாக கல்விப் போதனை அமைய வேண்டுமென்பதில் இஸ்லாம் கண்டிப்பாக உள்ளது (*Aghar, 2014*).*

*கல்வியை திறம்படக் கற்றுக் கொள்வதன் மூலமே மிகச் சிறந்ததொரு பண்பாடு மிக்க நாகரீமிக்க சமூகத்தை கட்டியெழுப்பலாம். எனவேதான் நபியவர்கள் அனுப்பப்பட்டதன் நோக்கம் குறித்து அல்குர்ஆன் குறிப்பிடும்போது, "அவன்தான் எழுத்தறிவில்லாத சமூகத்தார்களிலிருந்தே ஒரு தூதரை அனுப்பி வைத்தான். அவர் அவனுடைய வசனங்களை அவர்களுக்கு ஓதி காண்பித்து, அவர்களைப் பரிசுத்தமாக்கி தீர்க்கமான அறிவை (ஸுன்னா)யும் கற்றுக் கொடுக்கின்றார்;" (ஸுரா ஜும்ஆ: 02) எனக் கூறுகிறது.*

*அத்தோடு "நூன், எழுதுகோலின் மீதும், (அதன்மூலம்) அவர்கள் எழுதுகிறவற்றின் மீதும் சத்தியமாக," என அல்குர்ஆனில் கலம்-எழுதுகோல் எனும் பெயரிலேயே அத்தியாயம் இறக்கியருளப்பட்டிருப்பதும் கூட கல்வியின் முக்கியத்துவத்தை மேலும் எடுத்துக் காட்டுகிறது. இவ்வாறு கல்விக்கு முன்னுரிமை வழங்கி அதனைக் கற்றுக் கொள்வதன்பால் தூண்டும் இஸ்லாம் மார்க்கமானது கற்றுக் கொள்வதற்கான வழிமுறைகளையும் மிக அழகாகவே கூறியிருக்கிறது. அதற்கு அல்குர்ஆனும் மிகச்சிறந்த வழிகாட்டல்களை வழங்கியிருப்பதோடு நபியவர்களையும் சிறந்த ஆசனாக அடையாளப்படுhத்துகிறது. எனவே நபியவர்கள் "...அல்லாஹ் என்னைக் கடினமான போக்கு உள்ளவனாகவோ, எவரையும் வழிதவறச் செய்பவனாகவோ அனுப்பவில்லை. மாறாக, (இறைநெறியை) எளிதாக்கிச் சொல்லும் ஆசானாகவே என்னை அனுப்பியுள்ளான்" எனக் கூறினார்கள் (முஸ்லிம் : 2946).*

*இதனடிப்படையில் மாணவர்கள் சிறந்தவர்களாகவும், நற்பிரஜையாகவும் வாழ உன்னதமான கற்பித்தல் முறைமைகள் பயன்படுகின்றன. இன்றைய கல்வியலாளர்கள், கல்வி உளவியலாளர்கள் போன்றோர் கோட்பாடுகளாக (*concept*) முன்வைக்கின்ற பல்வேறு கற்பித்தல்*

முறைகளை பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னதாகவே வஹியின் நிழலில் இஸ்லாம் மிக அழகாகவே தெளிவுபடுத்தியுள்ளது என்பதனை எவராலும் மறுக்க முடியாது. இன்று அதுபற்றி சரிவர அறியாதிருப்பதும் கூட இன்று மாணவர்கள் கல்வியில் பின்னணியில் நிறபதற்கும் ஓர் காரணமாக அமைகிறது. Edgar Dale (1900-1989), ஆய்வின்படி வாசிப்பதினூடாக *10* வீதமும் செவிமெடுப்பதினூடாக *20* வீதமும் பார்ப்பதினூடக *30* வீதமும் பார்ப்பதும் செவிமெடுப்பதினூடாக *50* வீதமும் பிறருடன் கலந்துரையாடுவதன் மூலம் *70* வீதமும் அவ்விடயத்தை சுயமாக செய்து பார்ப்பதினூடாக *80* வீதமும் பிறருக்கு கற்றுக் கொடுப்பதினூடாக *90* சதவீதமும் கற்ற விடயங்கள் நினைவில் தங்குகின்றன எனும் விடயம் தெளிவுபடுத்தப்பட்டடுள்ளது.




*Learning Pyramid by Edgar Dale (1900-1989)*

இதனடிப்படையில் நபியவர்களின் ஸீராவை நோக்குகையில் நபியவர்கள் வெறுமனே அரசியல்வாதியாவோர்h, ஆன்;மீகத் தலைவராகவோ மாத்திரமல்லாது மேற்சொன்ன அனைத்து கற்றல் நுட்பங்களையும் தம் வாழ்வில் செயற்படுத்திக் காட்டிய சிறந்த ஆசானாகவும் கருமமாற்றியுள்ளார்கள் என்பதை தெளிவாக அவதானிக்க முடியும். "சிரமப்படுத்தாதீர்கள்! இலகுபடுத்துங்கள்"..... எனும் பொன்மொழிக்கிணங்க ஒவ்வொருவருடைய நிலையறிந்து அவரவர் சூழ்நிலைகளுக்கேற்ப பொருத்தமான கற்றல் முறைகளை உபயோகப்படுத்தியுள்ளமை சிறப்பம்சமாகும்.

**ஆய்வுப் பிரச்சினை**

மாணவர்கள் கல்வி கற்றலில் பல்வேறு வகையான சிரமங்களை எதிர்கொள்கின்றனர். அதற்கான முக்கிய காரணம் மாணவர்கள் முறையான கற்றல் நுட்பங்களை அறிந்து கொள்ளாமையும் ஆசிரியர்கள் முறையான நுட்பமுறைகளைப் பயன்படுத்தி கற்பித்தல் நடவடிக்கைகளில் ஈடுபடாமையுமாகும். எனவே இவ்வாய்வுப் பிரச்சினையை மையப்படுத்தியதாக இவ்வாய்வு அமைகிறது.

**ஆய்வு நோக்கம்**

*மாணவர்களது கற்றல் நடவடிக்கைகளை இலகுபடுத்த ஆசிரியர்கள் பின்பற்ற வேண்டிய நுட்பமுறைகளை இஸ்லாமிய நோக்கில் தெளிவுபடுத்தல்.*

***ஆய்வு முறையியல்***

*பண்புசார் முறையிலமைந்த இவ்வாய்வானது, மாணவர்களது கற்றல் நடவடிக்கைகளை இலகுபடுத்த ஆசிரியர்கள் எவ்வாறான கற்பித்தல் நுட்பமுறைகளை கையாள வேண்டுமென்பதை இஸ்லாத்தின் கண்ணோட்டத்தில் மதிப்பிடுகிறது. இவ்வாய்வை மேற்கொள்வதற்கு இஸ்லாத்தின் அடிப்படை மூலாதாரங்களான அல்குர்ஆன்-ஸுன்னா என்பன பயன்படுத்தப்பட்டதோடு ஆய்வுத் தலைப்போடு தொடர்பான நூல்கள், சஞ்சிகைகள், ஆய்வுக் கட்டுரைகள், இணையத்தள ஆக்கங்கள் முதலான இரண்டாம் நிலைத் தரவுகள் இலக்கிய மீளாய்விற்கு உட்படுத்தப்பட்டு விபரணப் பகுப்பாய்வு முறையில் முடிவுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.*

***இலக்கிய மீளாய்வு***

Muhammad Tahhir and Salih Yucel *ஆகியோரால்* 2019 *ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட* Motivational Techniques for Teaching: Prophetic Model *எனும் தலைப்பில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் 12 வகையான கற்பித்தல் நுட்பங்களை அடையாளப்படுத்தி மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதிலும் குறிப்பாக வினைத்திறனான கற்பித்தலை மேற்கொள்ள அவர்களை இன்முகத்துடன் வரவேற்றல், அவர்களுக்காக துஆச் செய்தல், அவர்களுடைய பெயர்களைக் கூறி உற்சாகப்படுத்தல், கேள்விகளை வினவி அவர்களது கவனத்தை சிதறவிடாமல் இருத்தல் முதலான விடயங்களும் உள்ளடக்கபட்டிருந்ததோடு ஆய்வின் முடிவாக நபியவர்களது இவ்வாறான கற்றல் ஊக்குவிப்புக்கள் வெறுமனே ஒரு சமூகத்துக்கான மாத்திரமான நுட்பங்களல்ல. மாறாக அது உலக மக்களுக்குரியது எனும் அடிப்படையில் பின்பற்றத்தகுதியானவை மற்றும் அவரது இவ்வாறு ஊக்கப்படுத்தும் கற்றல் நுட்ப முறையின் நோக்கம் இவ்வுலகிலும் மறுவுலகிலும் மகிழ்ச்சியான வாழ்வை வாழ வழிகாட்டுவதாகும் என்பதை புரிந்து கொள்ள முடிகிறது. மிகச்சிறந்த ஊக்குவித்தல் நடவடிக்கை என்பது இவற்றை முதலாவதாக நம்பி அவற்றை அமுல்படுத்துவதற்கு முன் மனப்பூர்வமாக அவற்றை செயற்படுத்துவதாகும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளன.*

Mizanur Rahman (2018) *ஆண்டில்* Education, Teaching Methods and Techniquues in the Early years of Islam during the Era of Prophet Muhammadh (SAW) *எனும் தலைப்பில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் கல்வி முறையை திறம்பட மேற்கொள்ள ஆரம்ப காலத்தில் முன்னெடுக்கப்பட்ட கல்வி நுட்பங்கள் சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் நபியவர்கள் வெறுமனே ஒரு புதிய சமூகத்துக்கான பிரச்சாரர் ஆகவோ, அல்லது ஒரு சமூகத்தின் தலைவரோ அல்ல. மாறாக, அவர் ஒரு வினைத்திறனான ஆசிரியரும் கல்வியை அறிமுகப்படுத்தக் கூடியவருமாவார் என்பது இவ் ஆய்விலிருந்து தெளிவாகிறது. ஆய்வின் முடிவாக இத்தகைய நுட்ப முறைகளை எம் வாழ்வில் கைக்கொள்ளுமிடத்து வெற்றிகரமான கற்றல் செயற்பாடுகளை முன்னெடுக்கலாம் என குறிப்பிடப்பட்டுள்ளது.*

Vahap Gultekin (n.d) The Educational Methods of Our Prophet (PBUH)- Brief Overview. *என்பவரால் எழுதப்பட்ட மிகச்சிறியதொரு புத்தகத்தில் நபியவர்களது கற்பித்தல் முறைகளாக நேர்மறையான விடயங்களை வாழ்த்துதல், செயற்பட வைத்தல், மீண்டுமீண்டும் கூறல், வரைபடங்கள் மூலமாக தெளிவுபடுத்தல், எழுதல் முதலான குறிப்பிட்ட சில கற்பித்தல் நுட்பங்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.*

Kemas Abdul Hai (2017) *என்பவரால்* The Islamic Education Methods in Al-Quran *எனும் தலைப்பில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில்* الحِكْمَة *(அல்-ஹிக்மா) - ஆழ்ந்த அறிவு,* المَوْعِظَةُ الْحَسَنَة *(அல்-மவ்இழதுல் ஹஸனஹ்) - நல்ல முறையில், நெகிழ்ச்சியான மற்றும் மரியாதையான அறிவுறுத்தல்,* الْمُجَادَلَة *(அல்-முஜாதலா) – விவாதம் ஆகிய மூன்று கொள்கைகளை மையப்படுத்தியதாக மனிதாபிமான கற்றல் நடவடிக்கைகளில் நபியவர்களது உதாரணம் எவ்வாறு அமைந்தது என்பதனை அல்குர்ஆனிய ஒளியில் விளக்கியுள்ளதுடன் அவை வெறுமனே முஸ்லிம்களால் மாத்திரம் இனங்காணப்பட வேண்டிய ஒன்றல்ல. மாறாக முஸ்லிம் அல்லாதவர்களாலும் இவை அடையாளம் காணப்பட வேண்டுமெனவும் குறுப்பிடப்பட்டுள்ளது. அல்குர்ஆன் உள்ளடக்கியுள்ள விரிவுரை முறைகளாக கதை கூறல், கேள்வி-பதில், கலந்துரையாடல், செயற்படுத்தல், எச்சரிக்கை மற்றும் ஆலோசனை, வெகுமதிகளும் தண்டனை முறைகளும் என அல்குர்ஆனின் முறைகள் இஸ்லாமிய கல்வி இலக்குகளை அடைய உதவுகின்றன என்ற அடிப்படையில் இவ்வாய்வு குறிப்பிடுகிறது.*

Ifthikhar Alam, Khalid Mahmood Arif & Muhammad Irfan (2019) *ஆகியோரால்* Teaching Strategies from Islamic Perspective: An Analytic Study *எனும் தலைப்பில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் அல்குர்ஆன்-ஸுன்னா ஒளியில் கல்வி, கல்வியின் இலக்குகள் மற்றும் வினைத்திறனான கற்பித்தல் முதலான விடயங்கள் தொடர்பில் பேசப்பட்டுளளன. அதிலும் குறிப்பாக அல்குர்ஆன் வினைத்திறனான கற்பித்தலுக்கு அறிவு, அறிவுறுத்தல் (ஆலோசனை), விவாதித்தல் (கலந்துரையாடல்) முதலான மூன்று வகையான விதிகளை விபரிப்பதாகவும் இவ்வாய்வில் குறிப்பிடப்படடுள்ளது. ஆய்வின் முடிவாக நபியவர்களால் சொல்லப்பட்ட ஒவ்வொரு விடயங்களும் கேட்பவரது உள்ளத்திலும் மூளையிலும் நன்கு தெளிவாக விளங்கும் வகையில் அமைந்திருந்தன எனவும் அவரது கற்பித்தல் முறையானது அன்பு, கரிசனை மற்றும் நலம் நாடல் முதலான பண்புகள் அமைந்திருந்தன எனவும் கூறுகின்றன. இதற்காக பல்வேறு உத்தி முறைகளையும் அவர கையாண்டிருப்பதையும் அவதானிக்கலாம். இவ்வாறான நுட்பமுறைகளை சரியாக பின்பற்றுவதினூடாக உண்மையான நன்னிலையையும் அபிவிருத்தியையும் மாணவர்களும் ஆசிரியர்களும் அடைந்து கொள்ள முடியுமென்பதை இவ்வாய்வு கூறுகிறது.*

**கலந்துரையாடலும் பெறுபேறுகளும்**

*இஸ்லாத்தை பொறுத்தவரை வினைத்திறனான கல்வி கற்பித்தல் நுட்பங்கள் மாணவர்களின் அல்லது பயில்பவர்களின் இயல்பான 'பித்ரா''வை நெறிப்படுத்தி அதனூடாக தனது சுயத்தை கண்டடைந்த மனிதனை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது என்பதனை பின்வரும் விடயங்களைக் கொண்டு புரிந்து கொள்ள வேண்டும். இஸ்லாமிய ஆதாரப் பனுவல்களும் நபிகளாரின் வழிமுறைகளும் இந்த நோக்கத்திற்காக வித்தியாசமான நுட்பங்களை பயன்படுத்தி இருக்கின்றன.*

*1. மாணவர்களிடம் வினாத் தொடுத்தல்*

*கேள்விகள் தன்னளவில் மிக முக்கியமானவை ஆகும். தன்னையும் தன்னைச் சுற்றி நடப்பவை பற்றியும் கேள்விகள் நிரம்பிய ஒருவனாலேயே முறையான கற்றலை கொண்டு செல்ல முடியும். மாணவர்கள் ஆசிரியர்கள் கூறுவதை முறையாக கிரகிப்பதற்கும் அவர்களது சிந்தனைகளை ஒருமுகப்படுத்துவதற்கும் மிகச்சிறந்த முறைமை அவர்களிடம் கேள்வி கேட்டலாகும். இதனைக் அல் குர்ஆனும் நபிகளாரும் பின்பற்றிய அணுகுமுறைகள் ஊடாக புரிந்து கொள்ள முடியும். குர்ஆன் இன்னும் ('ஹாவியா') என்ன என்று உமக்கு அறிவித்தது எது? (101:1) என்று கேள்விகளை எழுப்பியுள்ளது. அதே போல் நபிகளாரின் வரலாற்றிலும் ஏராளமான உதாரணங்களை காட்ட முடியும்.*

*“புறம் பேசுதல் என்றால் என்னவென்று உங்களுக்குத் தெரியுமா?.....” என நபியவர்கள் (தம் தோழர்களிடம்) கேட்டார்கள். அதற்கவர்கள் “அல்லாஹ்வும் அவன் தூதருமே நன்கறிந்தவர்கள்” எனக் கூறினார்கள். நான் கூறுவது என் சகோதரனிடம் இருந்தாலுமே? எனக் கேட்கப்பட்டது. அதற்கு நபியவர்கள் நீர் கூறுவது அவரிடம் இருந்தால், நீர் அவரைப் பற்றி புறம் பேசிவிட்டாய். நீர் அவரிடம் இல்லையெனில், நீர் அவரைப் பற்றி அவதூறு கூறிவிட்டாய் எனக் கூறினார்கள்.” (அபூதாவுத்: 4864), (முஸ்லிம்: 2589).*

*“வங்குரோத்து நிலையை அடைந்தவன் யார் என்று உங்களுக்குத் தெரியுமா?....” (முஸ்லிம்: 2581).*

*“இது எத்தகைய (சிறப்புமிக்க) நாள் என்று உங்களுக்குத் தெரியுமா?” (புகாரி: 1654).*

*2. கேள்வி கேட்கத் தூண்டுதல்*

*மாணவர்களுக்கு கேள்வி கேட்கத் தூண்டுவதற்காhன சந்தர்ப்பத்தை வழங்குவது மிகச்சிறந்த வழிமுறையாகும். இதன்மூலம் மாணவர்கள் தம் சந்தேகங்களை நிவர்த்தி செய்வதற்கான வழிவகைகள் உருவாவதோடு குறிப்பிட்ட விடயத்தில் தெளிவைப் பெறவும் உதவியாக அமையும். இதனை நபிகளாரை நோக்கி எழுப்பப்பட்ட கேள்விகளை எந்த விதமான மறுப்புகளும் இன்றி நபிகளார் அனுமதித்ததை வைத்தும் அதற்கு உரிய பதில்களை அளித்தமையை வைத்தும் எம்மால் புரிந்து கொள்ள முடியும். ஸஹாபாக்கள் மாத்திரம் அன்றி யூத கிறிஸ்தவர்களின் கேள்விகளைக் கூட எந்த விதமான புறக்கணிப்பும் அலட்சியப்படுத்தல்களும் இன்றி அணுகியமை இதனை மேலும் உறுதிப்படுத்துகிறது.*

*“ஒருவர் நபியவர்களிடம் இஹ்ராம் கட்டியவர் அணிய வேண்டிய ஆடைகளைப் பற்றிக் கேட்டததற்கு “சட்டை, தலைப்பாகை, கால்சட்டைகள், முக்காடு (அல்லது தொப்பி), பச்சைச் சாயம் தோய்ந்த ஆடை, அல்லது சிவப்புபக் குங்குமமச் சாயம் தோய்த்த ஆடை ஆகியவற்றை (இஹ்ராம் கட்டியவர்) அணியக் கூடாது. பாதணிகள் கிடைக்கவில்லையானால் (கணுக்கால்வரை) உயரமான காலுறைகளை அவர் அணிந்து கொள்ளலாம். (ஆனால்) கணுக்காலுக்குக் கீழே உயரம் குறையும் வரை அவ்விரண்டையும் வெட்டிவிடட்டும்’ என்று இறைத்தூதர் அவர்கள் கூறினார்கள். (புகாரி: 134).*

*கேள்வி கேட்பதற்கும் கேட்கப்பட்ட கேள்விக்கு இப்படியாக விரிவாக பதிலளிப்பதும் மாணவர்கள் குறித்த அவ்விடயம் தொடர்பான போதிய தெளிவைப் பெற உதவியாக அமையும்.*

*3. தெரியாததைச் சொல்லாது தவிர்த்தல்*

*தனக்குத் தெரியாததை சொல்லாது தவிர்த்தல் என்பது முக்கியமான அறிவுப் பண்பாடாகும். முழுமையடையாத அல்லது தனக்கு தெரியாத ஒன்றை தெரியாது எனக் கூறுவதே சிறந்தது (கன்னிங்காம், 2015).*

*ஒரு ஆசிரியருக்கு தெரியாததோர் விடயத்தை தெரியாதென கூறுவதற்கு வெட்கப்படக் கூடாது. இதன்மூலம் மாணவர்களுக்கு ஆசிரியர்கள் மத்தியில் நம்பிக்கை உருவாவதோடு மாணவர்களும் குறிப்பிட்ட விடயத்தில் முழுமையான திருப்தியோடு செல்வதற்கான வாய்ப்பு உருவாகும்.*

*நபி அவர்களிடம் “அல்லாஹ்வின் தூதரே! எனது செல்வத்தில் நான் என்ன செய்யட்டும்? எப்படி செல்வத்தின் கடமைகளை நிறைவேற்றுவது? எனக் கேட்ட போது வாரிசுச் சொத்து பற்றிய இறைவசனம் இறங்கும் வரை அவர்கள் எனக்கு பதிலேதும் சொல்லவில்லை என ஜாபிர் பின் அப்தில்லாஹ் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் கூறுகிறார்கள்.” (புகாரி: 6732; முஸ்லிம்: 1616)*

*ஹதீஸ் ஜிப்ரீல் எனப் பிரபல்யமான ஹதீஸிலும் மறுமைநாள் எப்போது வரும்? ஏன ஜிப்ரீல் (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள் நபியவர்களிடம் வினவ கேள்வி கேட்பவரை விட கேட்கப்படுபவர் இது பற்றி அதிகம் அறிந்தவறில்லை எனப் பதிலளித்தாரர்கள்.*

*4. மீட்டி மீட்டிச் சொல்லுதல்*

*அல்குர்ஆனும் சுன்னாவும் திரும்பச் சொல்லுதல் என்ற அணுகுமுறையை பரவலாக பயன்படுத்தப்படுகின்றன. இமாம் சுயூத்தியின் அல் இத்கான் எனும் அல்குர்ஆன் பயன்படுத்தி இருக்கும் இத்தகைய உத்தியைப் பற்றி ஆராய்கிறது எனலாம் (அஸ்சுயூத்தி, 2008).*

*இவ்வாறு திரும்பச் சொல்லுதல் முறைமையை குர்ஆன் பயன்படுத்தி ஒரு அத்தியாயம் அருளப்பட்டதும் இதற்குரிய சான்றாகும். அந்தவகையில் ஸூரா அர்ரஹ்மான் இந்த உத்தியை பயன்படுத்தி இருக்கின்றது. ஆகவே, நீங்கள் இரு சாராரும் உங்கள் (இரு சாராருடைய) இறைவனின் அருட்கொடைகளில் எதைப் பொய்யாக்குவீர்கள்? (55:13). பேராசிரியர் பஸ்லுர் ரஹ்மான் இது பற்றி கூறும் போது “அல்குர்ஆன் ஆனது தான் சொல்ல வரும் பொருளின் கருத்தாழத்தை உணர்த்தவே இத்தகைய திரும்பிச் சொல்லும் உத்தியை பயன்படுத்தி இருக்கின்றது (*Rahman, 1980).

*ஒரு விடயத்தை ஒருமுறை சொல்வதற்கும் அதை மீட்டி மீட்டி பல முறை கூறுவதற்குமிடையே வேறுபாடுகள் உண்டு. ஒருமுறை கூறப்படும் போது அதனது முக்கியத்துவம் சில சந்தர்ப்பங்களில் உணரப்படாமைக்கான வாய்ப்புகள் உண்டு. மாறாக அதனை அழுத்தியழுத்தி மீண்டும் மீண்டும் மொழியும் போது அவ்விடயம் மாணவர்கள் மத்தியில் ஆழப்பதிவதற்கான வாய்ப்புக்கள் அதிகம்.*

*நபியவர்கள் பேசும் போது அதனை எண்ணிப்பார்த்தால் எண்ணிக் கொள்ள முடியுமானதாக அமைந்திருக்கும் என ஆயிஷா (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் கூறுகிறார்கள். (புகாரி: 3567).*

*“எனக்கு உபதேசியுங்கள் என ஒரு மனிதர் நபியவர்களிடம் கேட்டார். அதற்கு நபியவர்கள் நீர் கோபப்படாதீர்! என பதிலுரைத்தார்கள். மீண்டும் மீண்டும் அம்மனிதர் தனக்கு உபதேசம் செய்யும்படி கேட்க அதனையே மீண்டுமீண்டும் கூறினார்கள்”. (புகாரி).*

*(ஒரு முறை) பெரும் பாவங்களிலேயே மிகப் பெரும் பாவங்களை நான் உங்களுக்கு அறிவிக்கட்டுமா? என நபியவர்கள் (மூன்று முறை) கேட்டார்கள். மக்கள், “ஆம், இறைத்தூதர் அவர்களே! (அறிவியுங்கள்) என்றார்கள். உடனே நபியவர்கள், அல்லாஹ்வுக்கு இணைவைப்பதும் பெற்றோருக்குத் துன்பம் தருவதும் (தான் அவை) என்று கூறிவிட்டு சாய்ந்து கொண்டிருந்தவர்கள் எழுந்து அமர்ந்து, ‘அறிந்து கொள்ளுங்கள்; பொய் சாட்சியமும் மிகப்பெரும்பாவம்)தான்’ என்று கூறினார்கள். நிறுத்திக் கொள்ளக் கூடாதா? என்று நாங்கள் சொல்கின்ற அளவுக்கு அதை (இறுதியாகச் சொன்னதை) திரும்பத் திரும்பக் கூறிக் கொண்டேயிருந்தார்கள்” (புகாரி: 2654).*

*நபியவர்களாய் ஏதாவது ஒரு வார்த்தை பேசினால் இது அவர்களிடமிருந்து புரிந்து கொள்ளப்பட வேண்டுமென்பதற்காக மும்முறை அதை திரும்பக் கூறுவார்கள். ஏதாவது ஒரு சமூகத்தாரிடம் சென்றால் மும்முறை ஸலாம் கூறுவார்கள். (புகாரி: 95) அறிவிப்பாளர் : அனஸ் (ரழியல்லாஹு அன்ஹு)*

*5. உரையாடல், கலந்துரையாடல்*

*இஸ்லாம் எல்லா விடயங்களிலும் கலந்துரையாடி முடிவெடுப்பதனை ஆதரிக்கிறது. இன்றைய கல்விக் கொள்கைகள் மாணவர்களை மையப்படுத்தியதாக அமையப் பெற்றிருப்பதால் ஆசிரியர்கள் மாணவர்களுடன் கலந்துரையாடி கற்பிப்பது முக்கிய பங்காற்றுகிது. இதனூடாக ஆசிரியர்-மாணவர்களுக்கு மத்தியில் நல்ல பரஸ்பர புரிந்துணர்வு வளரவும் கலந்தாலோசனை முறை துணை செய்கிறது. அந்தவகையில் நபியவர்களின் வாழ்விலும் இதனைப் காண முடியும். ஜிப்ரீல் (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள் நபியவர்களிடம் சில கேள்விகளைக் கேட்பதும் பின்னர் அதற்கு பதிலாக அமைந்த பல்வேறு ஹதீஸ்களையும் நாம் காணலாம்.*

*அல்குர்ஆனும் இதுபற்றி குறிப்பிடும் போது,*

*“நபியே! அல்லாஹ்வுடைய அருளின் காரணமாகவே நீங்கள் அவர்கள் மீது மென்மையானவராக நடந்து கொண்டீர்கள். நீங்கள் கடுகடுப்பானவராகவும் கடின உள்ளம் கொண்டவராகவும் இருந்திருப்பீர்களானால் உங்களிடமிருந்து அவர்கள் வெருண்டோடி இருப்பார்கள். ஆகவே, அவர்(களின் குற்றங்)களை நீங்கள் நீங்கள் மன்னித்து (இறைவனும்) அவர்களை மன்னிக்கப் பிரார்த்திப்பீராக! அன்றி, (யுத்தம், சமாதானம் ஆகிய) மற்ற காரியங்களிலும் அவர்களுடன் கலந்தாலோசித்தே வாருங்கள். (யாதொரு விஷயத்தை செய்ய) நீங்கள் முடிவு செய்தால் அல்லாஹ்விடமே பொறுப்பை ஒப்படையுங்கள். ஏனென்னறால், நிச்சயமாக அல்லாஹ் (தன்னிடம்) பொறுப்பு சாட்டுபவர்களை நேசிக்கிறான்” (3:159).*

*“இன்னும், அவர்கள் எத்தகையோரென்றால் தங்கள் இரட்சகனின் கட்டளைகளை ஏற்று தொழுகையையும் நிறைவேற்றுவார்கள். (இத்தகையோர்) இவர்களின் காரியமோ தங்களுக்குள் கலந்தாலோசித்தலாக இருக்கும். நாம் அவர்களுக்கு அளித்தவற்றிலிருந்து (தர்மமாகச்) செலவும் செய்வார்கள்” (42:38).*

*“(நபியே!) நீர் (மனிதர்களை) விவேகத்தைக் கொண்டு மற்றும் அழகான நல்லுபதேசத்தைக் கொண்டு உமதிரட்சகனின் வழியின் பக்கம் அழைப்பீராக! அன்றியும் எது மிக மிக அழகானதோ, அதைக் கொண்டு அவர்களுடன் நீர் விவாதம் செய்வீராக! நிச்சயமாக உமதிரட்சகன் அவனுடைய வழியிலிருந்து தவறியவரை மிக்க அறிந்தவன், இன்னும் நேர்வழி பெற்றவர்களையும் அவன் மிக்க அறிந்தவன்”. (16:125)*

*6. உதாரணம் கூறி விளக்குதல்*

*சொல்ல வந்த விடயங்களை உதாரணங்கள் ஊடாக விளக்குவது என்பது நவீன கல்வி கற்பித்தல் முறைகளில் ஒன்றாகும். மட்டுமன்றி சகல கல்வி முறைமைகளும் பரவலாக ஏற்றுக் கொள்ளும் முறைகளில் ஒன்றாகவும் இது காணப்படுகிறது. உதாரணம் கூறி விளக்குவதானது மாணவர்கள் இலகுவாக குறிப்பிட்ட அவ்விடயத்தை புரிந்து கொள்ளவும் ஒப்பீட்டு ரீதியில் விடயங்களை நினைவில் நிறுத்திக் கொள்வதற்கும் உதவியாக அமையும். இதனை நபிகளாரும் குர்ஆனும் பயன்படுத்தி இருக்குமாற்றை பின்வருமாறு விளங்க முடியும்.*

*“நல்ல நண்பன் மற்றும் கெட்ட நண்பனின் நிலையானது கஸ்தூரியைச் சுமக்கிறவனின் நிலையையும் (உலைக் களத்தில்) உலை ஊதுகிறவனின் நிலையையும் ஒத்திருக்கிறது. கஸ்தூரியைச் சுமப்பவன் ஒன்று அதை உனக்கு அன்பளிப்பாக வழங்கலாம். அல்லது நீ அவனிடமிருந்து (அதை விலைக்கு) வாங்கிக் கொள்ளலாம். அல்லது அதிலிருந்து நீ நறுமணத்தையேனும் பெறலாம். ஆனூல் உலை ஊதுபவனோ, ஒன்று உன்னுடைய ஆடையை எரித்துக் கரித்து விடுவான். அல்லது (அவனிடமிருந்து) நீ துர்வாடையையாவது அடைந்தே தீருவாய்” (புகாரி: 5534). அறிவிப்பவர் : அபூமூஸா (ரழியல்லாஹு அன்ஹு)*

*“மரங்களில் இப்படியும் ஒருவகை மரம் உண்டு. அதன் இலை உதிர்வதில்லை. அது முஸ்லிமுக்கு உவமையாகும். அது என்ன மரம் என்பதை எனக்கு அறிவியுங்கள்? என இறைத்தூதர் அவர்களிடம் கேட்கப்பப்பட்ட போது மக்களின் எண்ணங்கள், நாட்டங்கள் மரத்தின் பால் திரும்பியது. நான் அதை பேரீச்சை மரம்தான் என்று கூற வெட்கப்பட்டு அதைச் சொல்லாமல் இருந்தேன். பின்னர் இறைத்தூதர் அவர்களே! அது என்ன மரம் என எங்களுக்கு அறிவியுங்கள்” எனத் தோழர்கள் கேட்டதற்கு “பேரீச்சை மரம்” என்றார்கள். (புகாரி)*

*“உங்களில் ஒருவரது வாசலில் ஆறு ஒன்று இருக்கிறது. அதில் அவர் தினமும் ஐந்து தடவை நீராடுகிறார். அது அவரது (உடலிலுள்ள) அழுக்குகளில் எதையும் தங்கிவிடுமா? என்ன நினைக்கிறீர்கள் சொல்லுங்கள்?’ என்று கேட்டார்கள். ‘அவரது அழுக்குகளில் எதையும் தங்க விடாது’ என்று மக்கள் பதிலளித்தார்கள். ‘இது தான் ஐவேளைத் தொழுகையின் நிலையாகும் இதன் மூலம் அல்லாஹ் பாவங்களை நீக்குகிறான்’ என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.” (அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரலி) நூல்கள்: புகாரி 528, முஸ்லிம் (1185)*

*“(அல்லாஹ்வுக்கு இணைவைப்பவன் சிறந்தவனா?) அல்லது எவர், மறுமையைப் பயந்து தன் இரட்சகனின் அருளை ஆதரவு வைத்து, இரவு காலங்களில் சிரம் பணிந்தவராகவும், நின்றவராகவும் (அல்லாஹ்வை) வணங்கிக் கொண்டிருக்கின்றாரோ அவரா?” அறிந்தோரும், அறியாதோரும் சமமாவார்களா? (இதனைக் கொண்டு) நல்லுபதேசம் பெறுவோரெல்லாம் அறிவுடையோரே” என்று (நபியே!) நீர் கூறுவீராக! (39:09)*

*7. காட்சிப்படுத்தல்*

*ஒரு விடயத்தை விளக்க முனையும் போது அங்க அசைவுகளாலோயோ அல்லது குறிப்பிட்ட பொருட்களை நேரடியாக எடுத்துக் காட்டுவதினூடாக மாணவர்களின் உள்ளங்களில் நன்கு பதிப்பிக்க முடியும் இதனையும் நபியவர்களின் கற்பித்தல் முறையில் காணலாம்.*

*“நானும் அநாதையை ஆதரிப்பவரும் சுவர்க்கத்தில் இவ்வாறிருப்போம் என தனது சுட்டு விரலையும் நடுவிரலையும் இணைத்துக் காட்டினார்கள்” (புகாரி, முஸ்லிம்).*

*ரஸூலுல்லாஹி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் தனது இடது கையில் பட்டையும் வலது கையில் தங்கத்தையும் எடுத்து, கைகளை உயர்த்திக் காட்டி இவை இரண்டும் எனது சமூகத்தின் ஆண்களுக்கு ஹராமானவை பெண்களுக்கு ஹலாலானவை என்றார்கள் (அபூதாவுத், நஸாயி, இப்னுமாஜா. அல்ஜாமிஉஸ் ஸகீர்: 2274).*

*8. செயற்படுத்திக் காட்டுதல்*

*செயற்படுத்திக் காட்டுதல் என்பது வினைத்திறன் மிக்க கற்பித்தல் உத்தியாகும். அல்குர்ஆனை நபிகளாரின் செயற்படுத்தல் மூலம் விளங்க முடியும் என்பதை ஆயிஷா (ரழி) அவர்களது பின்வரும் அறிவிப்பு தெரியப்படுத்துகிறது. “அவரது வாழ்க்கை அல்குர்ஆனாகவே இருந்தது"(முஸ்லிம் 746). அதாவது அல்குர்ஆனிய போதனைகளை நபிகள் நாயகம் முழுவதும் செயற்படுத்தி காட்டியமையமானது மிகுந்த பலன் மிக்கதாக ஸஹாபாக்களுக்கு அமைந்தது. மாணவர்கள் எப்போதும் செயற்பாட்டு மாதிரியை (model) விரும்புவார்கள். அறிவைப் பெறுவதற்கு பலம் பொருந்திய ஒருமுறையாக இன்று காணப்படுகிறது.*

*“நான் எவ்வாறு தொழுவதை நீங்கள் கண்டீர்களோ, அவ்வாறே நீங்களும் தொழுங்கள்” (புகாரி)*

*“ஹஜ்ஜினுடைய கிரியைகளை நீங்கள் என்னிடமிருந்து எடுத்துக் கொள்ளுங்கள்”. (முஸ்லிம்)*

*9. செயற்பட வைத்தல்*

*ஒரு மாணவனுக்கு கோட்பாடாக வழங்கப்படும் அறிவை விட செயற்பாட்டு ரீதியாக வழங்கப்படும் போது மனதில் பதிய வைக்கவும் அதனை நடைமுறை வாழ்க்கையல் பிரயோகித்துப் பார்கவும் இம்முறை உதவுகின்றது.*

*“நபியவர்கள் ஒரு மனிதனை மூன்று முறை மீட்டி மீட்டி தொழச் செய்தார்கள். அம்மனிதன் இறுதியில் அல்லாஹ்வின் தூதரே எனக்கு கற்றுத் தாருங்கள்” எனக் கூறினார்கள். (அறிவிப்பவர் : அபூஹுரைரா றழி, நூல்: புகாரி - 757).*

*10. தவறுவிடும்போது இங்கிதமாக எடுத்துரைத்தல்*

*மாணவர்கள மத்தியில் பலதரப்பட்ட அறிவுமட்டத்தில் உள்ளவர்கள் இருப்பார்கள். சிலர் வேகமாகக் கற்கக் கூடியவர்கள், மெதுவாகக் கற்கக் கூடியவர்கள், உளவியல்*

*பாதிப்புபக்குள்ளானவர்கள், சோம்பலினால் தவறு விடுபவர்கள் என நாம் பல வகைப்படுத்த முடியும். இவ்வாறானவர்களோடு எவ்வாறு நடந்து கொள்ள வேண்டுமென நபியவர்கள் ஓர் முன்மாதிரியாகத் திகழ்ந்தார்கள். மாணவர்களின் பண்புகள் வேறுபட்டதாக இருக்கும் எனவே அன்பு காட்டுவது போல அவரகள் தவறு விடுகின்ற போது அவர்களை பொறுமையுடன் திருத்த முயற்சிக்க வேண்டும்.*

*"ஒருநாள் காட்டுப்புற அரபி ஒருவர் மஸ்ஜிதுந் நபவியில் சிறுநீர் கழித்து விடுகிறார் அப்போது ஸஹாபாக்கள் கோபமடைந்து அவரைத் தாக்க முனைகின்றனர். நபியவர்கள் அவரை விட்டுவிடுமாறு கூறி அவரை உபதேசித்து விட்டு ஸஹாபாக்களிடம் "ஒரு வாளி நீரைக் கொண்டு வந்து இங்கே ஊற்றுங்கள். எனக் கூறிவிட்டு "மனிதர்களுக்கு எதையும் இலகுபடுத்துபவர்களாகவே நீங்கள் அனுப்பப்பட்டுள்ளீர்ளே தவிர எதையம் கஷ்டப்படுத்தி சிரமப்டுத்தி கடினமாக்குபவர்களாக நீங்கள் அனுப்பபப்படவில்லை" என ஸஹாபாக்களுக்கு போhதனை செய்தார்கள*

*"நபியே! அல்லாஹ்வின் அருளின் காரணமாகவே நீங்கள் அவர்களோடு நளினமாக, நயமாக, அன்பாக நடந்து கொண்டீர்கள். நீங்கள் அவர்களோடு கடுகடுப்பானவர்களாக கடின உள்ளம் படைத்தவராகவும் இருந்திருந்தால் அவர்கள் உங்களை விட்டும் விரண்டோடியிருப்பார்கள்" (03:159).*

*11. ஊக்குவித்தல் மற்றும் பாராட்டுதல்*

*அபூமூஸா (ரழியல்லாஹுு அன்ஹுு) அவர்கள கூறியதாவது*

*அல்லாஹ்வின் தூதர் (ஸல்லல்லாஹுு அலைஹி வஸல்லம்) அவர்கள் என்னிடம், "(நான் இனிய குரலில் குர்ஆன் ஓதிக் கொண்டிருந்ததைச் செவியுற்றேன். அப்போது நீங்கள் என்னைப் பார்த்திருந்தால் (உங்களுக்கு மகிழ்ச்சியாய் இருந்திருக்கும்). (இறைத்தூதர்) தாவூத் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களுக்கு வழங்ககப்பட்டிருந்த சங்கீதம் (போன்ற இனிய குரல்) ஒன்று உங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது" எனக் கூறினார்கள் (முஸ்லிம்: 1454; முஸ்லிம்: 3695)*

*இவ்வாறு நிதானமான வழிமுறைகள் மூலமே மாணவர்கள் தவறிழைப்பவர்கள் சீர்செய்யப்பட்டார்கள் இவற்றிலிருந்து புரியலாம்.*

*12. இலகுபடுத்தல்*

*இலகுபடுத்தல் என்பதனை இஸ்லாத்தின் முழு சிந்தனைகளில் ஒன்றாக குறிப்பிட முடியும். அரசியல், பொருளாதாரம், கல்வி என சகல துறைகளிலும் வியாபித்து நிற்கும் ஒரு சிந்தனையாக இலகுபடுத்தல் சிந்தனை அமைகிறது. கல்வி ஈட்டல் அல்லது கற்பித்தல் முறைகளிலும் இதனை இஸ்லாம் முன்மொழிகிறது. எப்போதும் மாணவர்கள் இலகுவையே விரும்புவார்கள். எனவே ஒரு ஆசிரியர் மாணவர்களுக்கு சிரமத்தை வழங்காது இலகுவான அடிப்படையில் பாடங்களை விளங்கிக் கொள்வதற்கான வழிகாட்டல்களை வழங்க வேண்டும்.*

*நபியே!) நாம் இ(வ் வேதத்)தை உம்முடைய மொழியில் (அருளி) எளிதாக்கியதெல்லாம், இதைக் கொண்டு நீர் - பயபக்தியுடையவர்களுக்கு நன்மாராயங் கூறவும், முரண்டாக வாதம் செய்யும் மக்களுக்கு இதைக் கொண்டு அச்சமூட்டி எச்சரிக்கை செய்வதற்குமேயாகும்(19:97).*

*"நீங்கள் கஷ்டப்படுத்தாதீர்கள், நன்மாராயம் கூறுங்கள். வெறுப்பூட்டும் வகையில் நடந்துகொள்ளாதீர்கள். நன்மாராயம் கூறுங்கள்" (புகாரி)*

*"இலகுபடுத்துங்கள், கஷ்டப்படுத்தாதீர்கள். நன்மாரயம் கூறுங்கள். வெறுப்பூட்டாதீர்கள். கோபம் வந்தால் மௌனமாக இருந்து விடுங்கள்" (முஸ்னத் அஹ்மத்)*

*“எங்களுக்கு சலிப்பேற்பட்டு விடக் கூடாது என்று அஞ்சிப் பல்வேறு நாட்களிலும் கவனித்து எங்களுக்கு நபியவர்கள் அறிவுரை வழங்குபவர்களாக இருந்தார்கள்.” (புகாரி: 68).*

*“இரண்டு விஷயங்களில் விரும்பியதை தேர்ந்தெடுத்துக் கொள்ளும்படி அல்லாஹ்வின் தூதரிடம் கூறப்பட்டால் அவர்கள் அவ்விரண்டில் இலேசானதையே- அது பாவமான விஷயமாக இல்லாதிருக்கும் பட்சத்தில் தேர்ந்தெடுப்பார்கள்”…… (புகாரி: 3560).*

*13. மாணவனை இனங்காணல்*

*ஆசிரியர்களைப் பொருத்தவரை அவர் மாணவர் ஒவ்வொருவரையும் நன்கு அறிந்து வைத்திருக்க வேண்டும். அவர்களிடமுள்ள ஆற்றல்கள், அவர்கள் எத்துறைக்குப் பொருத்தமானவர்கள் முதலானவை குறித்து ஓர் ஆசிரியர் அறிந்து அதற்கேற்றாற்போல் வழிகாட்டுமிடத்து அது அம்மாணவனது இலக்கை சரியாக அடையவும் அதன் மூலம் சமூகம் பயன்பெறவம் வாய்ப்பாக அமையும். நபியவர்கள் இப்பணியைச் செய்தார்கள்.*

*“நால்வரிடமிருந்து அல்குர்ஆனைக் கற்றுக் கொள்ளுங்கள். அவர்கள் இப்னு மஸ்ஊத் (ரழியல்லாஹு அன்ஹு), முஆத் இப்ன ஜபல் (ரழியல்லாஹு அன்ஹு), உபை இப்னு கஅப் (ரழியல்லாஹு அன்ஹு), அபூஹுதைபா றழியின் அடிமை ஸாலிம் (ரழியல்லாஹு அன்ஹு)” (புகாரி : 4999)*

*அபூஉபைதா (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களை ‘அமானுல் உம்மத்’ என்றார்கள். அகழ் போராட்டத்தின் போது பெண்களின் பாதுகாப்புக்காக ஹஸ்ஸான் இப்னு ஸாபித் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களை அமர்த்தினார்கள். ஹிஜ்ரத்துக்கு முன்னர் முஸ்அப் இப்னு உமைர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களை யஸ்ரடிபுக்கு தனது பிரதிநிதியாக அனுப்பி வைத்தார்கள். இப்னு அப்பாஸ் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களை தப்ஸீர் துறையிலும், ஸைத் இப்னு ஸாபித் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களை மொழித்துறைக்க பயிற்றுவித்தார்கள்.*

*14. ஒப்பிட்டுக் காட்டல்*

*ஒப்பீடு செய்து விளங்கப்படுத்தல் மிக முக்கியமான கற்பித்தல் உத்தி ஆகும். தற்காலத்தில் நவீன கற்பித்தல் முறையான இது தனியான அறிவுத் துறையாகவும் வளர்ந்துள்ளதை அவதானிக்க முடியும். அரசியல் கோட்பாடுகள் தொடக்கம் மத ஒப்பீட்டாய்வு என ஒப்பீடு செய்து அறிவை அடைந்து கொள்ளும் கல்வித்துறைகள் விருத்தி அடைந்து இருக்கின்றன. அந்தவகையில் குர்ஆன் மற்றும் சுன்னாவும் இதே முறைமைகளை பின்பற்றி இருக்கின்றன. உதாரணமாக பின்வருவனவற்றை குறிப்பிட முடியும்.*

*(அல்லாஹ்வுக்கு இணைவைப்பவன் சிறந்தவனா?) அல்லது எவர், மறுமையைப் பயந்து தன் இரட்சகனின் அருளை ஆதரவு வைத்து இரவு காலங்களில் சிரம் பணிந்தவராகவும், நின்றவராகவும் (அல்லாஹ்வை) வணங்கிக் கொண்டிருக்கின்றாரோ அவரா?” அறிந்தோரும், அறியாதோரும் சமமாவார்களா? (இதனைக் கொண்டு) நல்லுபதேசம் பெறுவோரெல்லாம் அறிவுடையோரே” என்று (நபியே!) நீர் கூறுவீராக!(39:9).*

*“நீர் நெருப்பை அணைப்பது போல் தர்மம் பாவங்களை போக்கி விடும்” (திர்மித்-614).*

*நபியவர்களிடம் ஒரு பெண்மணி வந்து, என் தாயார் ஹஜ் செய்வதற்காக நேர்ச்சை செய்திருந்தார். ஆனால் ஹஜ்ஜை நிறைவேற்றுவதற்குள் அவர் இறந்து விட்டார். நான் அவர் சார்பாக ஹஜ் செய்யலாமா? ஏன கேட்டார். நபியயவர்கள் ஆம் அவர் சார்பாக ஹஜ் செய் எனக் கூறிவிட்டு “உன் தாயார் மீது கடன்; இருந்தால் நீ அதை (அவர் சார்பாக) நிறைவேற்றுவாய் அல்லவா? எனக் கேட்டார்கள். அந்தப் பெண், ஆம் (நிறைவேற்றுவேன்) என பதிலளித்தார்கள். நபியவர்கள், “அப்படியென்றால் (நேர்ச்சையின் மூலம்) அல்லாஹ்வுக்கு செலுத்த வேண்டியதை*

*நிறைவேற்றங்கள். ஏனெனில், வாக்கு நிறைவேற்றப்பட அல்லாஹ்;வே மிகவும் அருகதையுடையவன் என சொன்னார்கள்'' (புகாரி-7315) இப்னு அப்பாஸ் (ரழியல்லாஹு அன்ஹு)*

*15. இலகுவானதை தேர்ந்தெடுக்க தூண்டல்*

*எப்போதும் ஓர் ஆசிரியர் மாணவர்களுக்கு சிறந்த ஆலோசனைகளை வழங்குபவர்களாக இருக்க வேண்டும். அவர்களிடம் எந்தவொன்றையும் திணிக்கக் கூடாது. மாறாக அவர்களது இயலுமைகளுக்கேற்ற விடயங்களை தெரிவு செய்வதில் சிறந்ததோர் வழிகாட்டியாக இருக்க வேண்டும்.*


*அல்லாஹ் உங்களுக்கு இலகுவானதை நாடுகிறானே தவிர, உங்களுக்கு சிரமமானதை அவன் நாடவில்லை (2:185) என்ற குர்ஆன் வசனம் இலகுபடுத்தலை தேர்வு செய்யும் கட்டளையை பிறப்பிக்கின்றது என்பதை புரிந்து கொள்ள முடியும்.*

*''இரண்டு விஷயங்களில் விரும்பியதை தேர்ந்தெடுத்துக் கொள்ளும்படி அல்லாஹ்வின் தூதரிடம் கூறப்பட்டால் அவர்கள் அவ்விரண்டில் இலேசானதையே- அது பாவமான விஷயமாக இல்லாதிருக்கும் பட்சத்தில் தேர்ந்தெடுப்பார்கள்''…… (புகாரி-3560)*

*16. உபகரணங்களை உபயோகித்தல்*

*வெறுமனே வாயால் கற்பிப்பதைக் காட்டிலும் பாடத்துறையோடு பொருத்தமான உபகரணங்களைப் பயன்படுத்தி கற்பித்தல் நடவடிக்கைகளில் ஈடுபடாவதானது கற்பித்தல் நடவடிக்கைகளை வினைத்திறனாக மேற்கொள்ள உதவுவதோடு மாணவர்களும் மிக இலகுவான அமைப்பில் அப்பாடத்தை விளங்கிக் கொள்வதற்கான வாய்ப்பையும் வழங்குகிறது.*

*அப்துல்லாஹ் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கிறார்கள். ஒருமுறை ரஸூலுல்லாஹி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் சதுர வடிவத்தில் ஒரு கோடு வரைந்தார்கள். அச்சதுரத்துக்கு வெளியில் தோன்றிய நிலையில் மற்றொரு கோடு வரைந்தார்கள். பிறகு அந்த சதுரத்திற்குள் சிறு சிறு கோடுகள் வரைந்தார்கள். (மார்க்க அறிஞர்கள் அதன் வடிவ அமைப்பை பல விதமாக வரைந்துள்ளார்கள் அவற்றில் ஒன்று இங்கு வரையப்பட்டுள்ளது)*



*அதன் பிறகு ரஸூலுல்லாஹி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள், ''இந்நடுக்கோடு மனிதன், அவனை நாலாபுறத்திலும் சூழ்ந்துள்ள சதுரக்கோடு அவனது மரணம்; அதிலிருந்து அவன் தப்பவே முடியாது. சதுரத்தை விட்டு வெளியே நீண்டிருக்கும் கோடு அவனது உலக ஆசைகள்; அவை அவன் வாழ்வின் எல்லையைக் கடந்துள்ளது. சிறிய கோடுகள் யாவும் அவனது நோய்களும் பிரச்சினைகளுமாகும். ஒன்றிலிருந்து தப்பித்தால் மற்றொன்றில் அகப்பட்டுக் கொள்கிறான். அதிலிருந்து தப்பித்துக் கொண்டால் வேறொரு ஆபத்தில் சிக்கிக் கொள்கிறான்" என்பதாகக் கூறினார்கள். (புகாரி)*

*17. பிறருக்கு கற்றுக் கொடுக்க தூண்டல்*

*தூதரே! உம் இறைவனிடமிருந்து உம்மீது இறக்கப்பட்டதை (மக்களுக்கு) எடுத்துக் கூறிவிடும்; (இவ்வாறு) நீர் செய்யாவிட்டால், அவனுடைய தூதை நீர் நிறைவேற்றியவராகமாட்டீர்; அல்லாஹ் உம்மை மனிதர்களி(ன் தீங்கி)லிருந்து காப்பாற்றுவான்; நிச்சயமாக அல்லாஹ் நிராகரிக்கும் கூட்டத்தாரை நேர்வழியில் செலுத்தமாட்டான் (5:67) என்ற குர்ஆன் வசனம் தனக்கு தெரிந்த*

*ஒன்றை பிறருக்கு எத்திவைக்க வேண்டும் என்பதை கட்டளையாக நபிகளாருக்கு வழங்கி இருக்கிறது இதனூடாக நபிகளாரின் வழிகாட்டல்களை பேணும் சமூகம் என்ற வகையில் முஸ்லிம்களும் இதனை பின்பற்ற வேண்டியிருக்கிறது.*

*"யார் எனது பேச்சை செவிமெடுத்து அதனை விளங்கி தான் செவிமடுத்ததைப் போன்று அதனை எத்தி வைக்கின்றாரோ அந்த மனிதருக்கு அல்லாஹ் அருள் செய்யட்டும். ஏனெனில், சிலவேளை செவிமடுத்தவரை விட எத்திவைக்கப்பட்டவர் நன்கு அதனை விளங்கிக் கொள்ள முடியும்".*

*இங்கு வருகை தந்திருப்பவர், வராதவருக்கு இந்தச் செய்தியை எடுத்துக் கூறி விட வேண்டும். ஏனெனில் வருகை தந்திருப்பவர், தன்னை விட நன்கு புரிந்து கொள்ளும் ஒருவருக்கு அந்தச் செய்தியை எடுத்துச் சொல்லி விடக் கூடும்" என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (அறிவிப்பவர்: அபூபக்ரா (ரலி) நூல்: புகாரி 67)*

*"உங்களில் சிறந்தவர் அல்குர்ஆனைத் தானும் கற்று பிறருக்கும் கற்றுக் கொடுப்பவருமாவார்". (புகாரி)*

*18. நடைமுறைப்படுத்தல்*

*கற்ற விடயத்தை வாழ்வில் நடைமுறைப்படுத்துவதன் மூலமே கற்ற கல்வியின் பயனை அடைந்து கொள்ள முடிவதோடு நினைவிலும் ஆழமாக பதியும். அதிலும் கல்வியைப் போதிக்கும் ஆசிரியர் தான் கற்றுக் கொடுக்கும் விடயத்தை தன்னுடைய நடைமுறை வாழ்வில் அமுல்படுத்தும் போதே அது முன்மாதிரியாக அமைவதோடு கற்ற விடயத்தை மாணவர்கள் தம் வாழ்வில் எடுத்து நடக்கவும் உறுதுணையாக அமையும்.*

*"விசுவாசங் கொண்டோரே! நீங்கள் செய்யாததை ஏன் கூறுகின்றீர்கள்". (61:02)*

*அல்குர்ஆனில் பத்து வசனங்களை மனனமிட்டு வாழ்க்கையில் அமுல்படுத்தாதவரை அடுத்த வசனங்களை படிப்பதில்லை என இப்னு மஸ்ஊத் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் கூறியுள்ளதிலிருந்து இதன் முக்கியத்துவத்தை உணரலாம்.*

*19. ஆய்வு செய்ய வழிகாட்டல்*

*ஆசிரியர்கள் தாம் கூறும் விடயங்களை மாத்திரமே மாணவர்கள் கேட்க வேண்டுமென்ற நிலைப்பாட்டிலிருந்து நீங்கி மாணவர்களை ஆய்வு முயற்சிகளில் ஈடுபட வழிகாட்ட வேண்டும். இதனூடாக பல புதிய விடயங்களை கண்டுபிடிப்பதற்கான வாய்ப்புக்கள் உருவாவதோடு மாணவர்கள் குறித்த அவ்விடயத்தில் கண்மூடித்தனமாக விளங்கிக் கொள்ளாமல் ஆய்வு செய்து தெரிந்து கொள்வதால் தெளிவானதோர் விளக்கத்தை பெற உதவியாக அமையும்.*

*அல்குர்ஆனில் ஆராயுமாறும், சிந்திக்கத் தூண்டுவதுமான சுமார் 35 வசனங்கள் காணப்படுகின்றன.*

*"திட்டமாக ஜின்களிலும் மனிதர்களிலும் அனேகரை நரகத்திற்காகவே நாம் படைத்திருக்கின்றோம். (அவர்கள் எத்தகையோரென்றால்,) அவர்களுக்கு இதயங்களிக்கின்றன. அவற்றைக் கொண்டு (நல்லவற்றை) அவற்றை விளங்கிக் கொள்ளமாட்டார்கள். அவர்களுக்கு கண்களுமுண்டு. (எனினும் அவற்றைக் கொண்டு(இவ்வுலகிலுள்ள அல்லாஹ்வின் அத்தாட்சிகளை) அவர்கள் பார்க்கமாட்டார்கள். அவர்களுக்கு காதுகளுமுண்டு. அவற்றைக் கொண்டு அவர்கள் (நல்லவற்றைச்) செவியேற்கமாட்டார்கள். அவர்கள் கால்நடைகளைப் போன்றவர்கள். ஏன் (அவற்றைவிட) அவர்கள் மிக வழிகெட்டவர்கள். அவர்களேதாம் (நம் வசனங்களை அலட்சியம் செய்து) பராமுகமானவர்களாவர்"(7:179).*

*"பூமியில் சுற்றித்திரிந்து, படைப்பை எவ்வாறு (ஆரம்பத்தில்) அவன் துவங்கி, பின்னர் அல்லாஹ் மற்றொரு உற்பத்தியை (எவ்வாறு) உண்டு பண்ணுகிறான் என்பதைப் பாருங்கள். நிச்சயமாக*

*அல்லாஹ் ஒவ்வொரு பொருளின் மீதும் மிக்க ஆற்றலுடையோன்" என்று (நபியே!) நீர் கூறுவீராக (29:20).*

*20. தெரிந்தவர்களிடம் கேட்டுத் தெளிவு பெறல்*

*நபியவர்கள் ஆசிரியகளுக்கும் பிரச்சாரர்களுக்கும் குறித்த நபர்களின் மனநிலைகளுக்கு மனோபாவங்களுக்கேற்ப கற்பிக்குமாறு அறிவுறுத்தல் வழங்கினார்கள் என முனவ்வர் ஜஹான் குறித்துக் காட்டுகிறாh;ர்*

*"(நபியே!) இன்னும் உமக்கு முன்னர் (மனிதர்களில் தூதுவர்களாக) ஆடவர்களையே தவிர நாம் அனுப்பவில்லை. அவர்கள்பால் நாம் வஹி அறிவித்தோம். ஆகவே, நீங்கள் (அதனைப் பற்றி) அறியாதவர்களாக இருந்தால் அறிந்தவர்களிடம் கேட்டு(த் தெரிந்)க் கொள்ளுங்கள்*

*தெளிவான அத்தாட்சிகளையும், வேதங்களையும் (அத்தூதர்களுக்கு கொடுத்தனுப்பினோம்) மேலும், மனிதர்களுக்கு அவர்கள் பால் இறக்கி வைக்கப்பட்டதை நீர் அவர்களுக்குத் தெளிவுபடுத்துவதற்காக மற்றும் அவர்கள் சிந்திப்பவர்களாக ஆகிவிடலாம் என்பதற்காகவும் உம்பால் இவ்வேதத்தை நாம் இறக்கிவைத்தோம்" (16:43-44)*

*"மேலும், (நபியே!) உமக்கு முன்னரும்) மனிதர்களிலிருந்து) ஆடவர்களிளையே அன்றி வேறெவரையும் நாம் நம்முடைய தூதராக அனுப்பவில்லை. (உமக்கு அறிவிக்கிற பிரகாரமே) அவர்களுக்கு நாம் வஹி அறிவித்தோம். ஆகவே, (இவர்களிடம் நீர் கூறுவீராக! இதனை) நீங்கள் அறியாதவர்களாக இருந்தால் (வேதத்தை) அறிந்தோரிடம் கேட்டுக் கொள்ளுங்கள்". (21:7)*

*அறிவைப் பகிர்ந்து கொள்ளும் விழுமியம் ஊடாகவே இஸ்லாமிய நாகரீகம் வளர்ச்சி கண்டது எனலாம். அந்த வகையில் நபிகளாரின் வழிகாட்டல்களும் இதனை தழுவியே உள்ளன.*

**முடிவுரை**

*இஸ்லாம் எல்லாத் துறைகளைப் போலவே கல்விக்கும் முன்னுரிமை அளித்துள்ள மார்க்கம் என்ற வகையில் அக்கல்வியை சரிவரக் கற்றலுக்கான கற்றல் நுட்பங்களையும் அல்குர்ஆன்-அஸ்ஸுன்னாவின் தெளிவாகவே முன்வைத்துள்ளது. மாணவர்களை சிந்திக்கப் பழக்குகின்ற, போட்டித் தன்மைகளற்ற, அற விழுமியங்களை அடிப்படையாக கொண்ட கல்வி முறைமை நாடி நிற்கின்ற இஸ்லாம் அதனை வெற்றிகரமாக சாத்தியப்படுத்தும் வகையில் பல்வேறுபட்ட கற்பித்தல் முறைகளை பேசியும் முன்வைத்தும் இருக்கின்றது. இதனடிப்படையில் ஓர் ஆசிரியர் கற்பித்தல் நடவடிக்கைகளில் ஈடுபடும் போது எவ்வாறான கற்பித்தல் நுட்பங்களை கடைபிடிக்க வேண்டுமென்ற சில வழிகாட்டல்கள் இவ்வாய்வினூடாக முன்மொழியப்பட்டுள்ளது. இவற்றை சிறந்த முறையில் அறிந்து ஆசிரியர் தம் பணியில் கடைபிக்குமிடத்தும் மாணவர்களும் அவற்றை நடைமுறையில் பிரயோகிக்கும் போது அச்சமூகம் சிறந்த அடைவுகளை எட்டி கல்விப் பணியினூடாக சமூகத்திற்கான காத்திரமான பணிகளை மேற்கொள்ள முடியுமென்பது புலனாகிறது.*

## REFERENCES

Al Quran

Aghar Muhammed, A. C. (2015). *The teacher's duty that leads to heaven*. Islamic Media Network. https://islamicmedianetwork.wordpress.com/category/uncategorized/

Aghar Muhammed. (2014). *Education in the view of Islam.* https://muslimseducation.blogspot.com/2014/04/blog-post

Alam, I., Arif, K. M., & Irfan, M. (2019). *Teaching strategies from an Islamic perspective: An analytic study*. AL-QAMAR: Bi-Annual Research Journal, 2(1), 117-130. https://www.researchgate.net/publication/370456736

Al-Suyuti, J. A. (2008). *Al-Itqan fi Ulum al-Quran (M. A. Ibrahim, Ed.).* Dar Ibn Kathir.

Cunningham, L. A. (Ed.). (2015). *The Essays of Warren Buffett: Lessons for Corporate America* (4th ed.). Carolina Academic Press.

Gultekin, V. (n.d). *The educational methods of our Prophet (PBUH) - A brief overview*. Australian Islamic Library. http://www.australianislamilibrary.org/teaching-skills.html

Ifthihar Alam, Khalid Mahmood Arif & Muhammad Irfan (2019). Teching Strategies from Islamic Perspective: An Analytic Study. *AL-QAMAR"Bi Annual Research Journal.* Vol 2(1), pp. 117-130 https://www.researchgate.net/publication/370456736

Mazahir, S. M. M. (2021). *Muhammad (PBUH)'s teaching methodologies*. Islamic Knowledge Repository. Tamil Nadu Muslim Kalvi Iyakkam. https://ismiyaarivukaruluam.com/2021/10/15/teaching-methodologies

Muhammed, ad Tahir & Salih Yucel. (2019). Motivational Technques for Teaching: Prophetic Model. *International Journal of Teaching and Education. Vol* 7(2) pp.70-85 https://www.eurrec.org/ijote-article-17459

Nalir, M. H. M. (2023). *Muhammad (PBUH) as an exemplary primary teacher - Part 7*. Salamah. https://salamah.lj/

Noorul Shifa, J., & Sifkan, M. H. M. (2025). *The status of undergraduates on partial and complete memorization of the Holy Qur'an* [Review of the article *the status of undergraduates on partial and complete memorization of the Holy Qur'an*]. *KALAM International Research Journal – Faculty of Arts and Culture*, 18(1), 46–57. https://www.seu.ac.lk/fac/kalam/volume18no1.php#

Quran Teacher Academy. (n.d). *Foundations and objectives of Islamic education*. https://quranteacheracedemy.com/blog/Islamic-education/

Rahman, F. (1980). *Major Themes of the Qur'an*. University of Chicago Press.

Rahman, MM. (2018). Education, Teaching Methods and Techniques in the Early Years of Islam During the Era Prophet Muhammad (SAW). *IJRDO-Journal of Educational Research*, 3(3). https://doi.org/10.53555/er.v3i3.1876

Sadhiq. (2021). *The simple messenger who loved simplicity*. https://eagathuvam.com/

Vahap Gultekin. (n.d). *The Educational Methods of Our Prophet (PBUH)- Brief Overview.* Australian Islamic Library. http://www.australianislamilibrary.org/teaching-skills.html